www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 3rd Term Examination - 2022

FWC

**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**
**Communication & Media Studies**

Three Hours 10 min | 29 | T | I,II

Gr -12 (2022)

**அறிவுறுத்தல் :-**

- **பகுதி I எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பகுதி I புள்ளிகள் வீதம் மொத்தம் 25 புள்ளிகள்.**
- **பகுதி II ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
- **பகுதி II ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

## பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❖ **1 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), 3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து புள்ளடித்தாளில் புள்ளடியிடுக.**

01. தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தின் அவசியத்தினை உலகளாவிய ரீதியில் பரவலடைய செய்வதில் முனைப்புக் காட்டிய அமைப்பு?
   1) ஐரோப்பிய ஆணைக்குழு
   2) உலக கல்வி ஆராச்சி மையம்
   3) ஐக்கிய நாடுகள் சபை
   4) யுனெஸ்கோ
   5) தேசிய கல்வி நிறுவகம்

02. தொடர்பாடல் செயற்பாடு ஓர் இடத்திலிருந்து ஆரம்பித்து இன்னோர் இடத்தில் முடிவடையாமல் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது என்பதை சிறப்பாக காட்சிப்படுத்தும் தொடர்பாடல் மாதிரி.
   1) அரிஸ்ரோட்டில் மாதிரி
   2) ஹப்மாதிரி
   3) ஒஸ்குட் மற்றும் ஷ்ராம் மாதிரி
   4) ஷனன் மற்றும் வீவர் மாதிரி
   5) லாஸ்வெல் மாதிரி

03. தற்காலத்தில் ஊடக தொழினுட்ப கருவிகள் எல்லையற்ற மற்றும் விசித்திர ஊடகப்பாவனையை ஏற்படுத்தியமையால் ஊடகங்களில் இருந்து மனிதனைப் பிரிப்பதற்குப் பதிலாக எச்சரித்து தேவையான அறிவை வழங்க வேண்டுமென வலியுறுத்திய பிரகடணம்.
   1) மனித உரிமைகள் பிரகடணம்
   2) குரூன்வெல்ட் பிரகடணம்
   3) ஊடகப் பிரமாணக்குறிப்பு
   4) சிறுவர் உரிமைகள் பிரகடணம்
   5) தகவலறியும் சட்ட மூலம்

04. விரைவாக பரவலடையக்கூடிய தன்மை கொண்ட தகவலின் மூலத்தை தெளிவாக இனங்காண முடியாத தொடர்பாடல் வடிவம்.
   1) முறைசாராத் தொடர்பாடல்
   2) முறைசார் தொடர்பாடல்
   3) வாய்மொழித் தொடர்பாடல்
   4) பேச்சுத் தொடர்பாடல்
   5) அளிக்கைத் தொடர்பாடல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

05. நந்தன் தனது வாழ்க்கையில் நடந்த துயரமான சம்பவமொன்றை கூறிய போது அதனை கேட்டுக்கொண்டிருந்த நிமால் ஒருவித மனநிலைக்குள் தள்ளப்பட்டிருந்தான். ஆளிடைத் தொடர்பாடலில் இத்தகைய நிலை,

1) விரக்தி 2) கோபம் 3) மன அழுத்தம்
4) புரிந்துணர்வு 5) ஆழ்பரிவு

06. தகவலில் கூறப்பட்டதனை விளங்கிக் கொள்வதற்கு அதிலுள்ள குறியீடுகளுக்கு அமைவாக பொருள் கொள்ளல் செயன்முறை எவ்வாறு இனங்காணப்படும்.

1) குறியீடுகள் 2) குறிமுறையாக்கம் 3) குறிமுறையவிழ்ப்பு
4) மொழிபெயர்ப்பு 5) அர்த்தம்

07. நவீன வெகுசன ஊடகங்களில் குறைந்தளவில் காணப்படக்கூடிய பண்பாகக் கருத்திற்கொள்ளக் கூடியது.

1) நாட்டாரியலை பாவனைக்கு எடுத்துக் கொள்ளலாகும்.
2) நிறுவனமயப்படுத்தப்பட்டுக் காணப்படுவதாகும்.
3) தூண்டல் அதிகமாகக் காணப்படுதலாகும்.
4) ஊக்கிகளைப் பயன்படுத்தலாகும்.
5) மனிதர்களது அன்பை இனங்காண்பதாகும்.

08. உலகில் தொடர்பாடல் கற்கை நெறிக்கு துறைசார் பாடமெனும் அங்கீகாரத்தை முதலில் வழங்கிய பல்கலைக்கழகம்.

1) தெஹிவளை களிஷ்ட பல்கலைக்கழகம்.
2) ஷிக்காக்கோ இலினோயிஸ் பல்கலைக்கழகம்.
3) பெல்ஷில் வேனியா பல்கலைக்கழகம்.
4) ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்.
5) உமேயாப் பல்கலைக்கழகம்.

09. ஹப் (HUB) மாதிரியில் குறிப்பிடப்பட்ட கூறுகளுக்கு அமைய யாதேனும் ஒரு காரணத்திற்காக ஊடகத்திற்கு அதிக அதிகாரம் வழங்கும் செயன்முறையுடன் தொடர்புடையது.

1) ஊடக விஸ்தீரணம் 2) வடிகட்டி 3) ஊடக திரிபு
4) வாயிற்காப்பு 5) ஒழுங்காக்கி

10. தொடர்பாடலுக்கான அர்த்தம் "தொடர்புகளை ஏற்படுத்தும் செயற்பாடாகும்" எனப் பொருள்படுவது.

1) தமிழ் மொழியில் 2) ஆங்கில மொழியில் 3) சிங்கள மொழியில்
4) சீனமொழியில் 5) இலத்தீன் மொழியில்

11. பாரம்பரிய ஊடக முறைமைகளுள் ஒன்றான நாட்டார் பாடல்கள் பற்றிய தவறான கூற்றாக அமைவது.

1) கிராம மக்களின் தேவைகளுக்கு ஏற்ப உருவானது.
2) நீண்ட காலமாக மக்களிடையே நிலவிவரும் பாரம்பரிய கலை.
3) உருவாக்கியவர் பற்றிய உறுதித்தன்மையைக் கொண்டது.
4) சாதாரண மக்கள் கோலத்துடன் தொடர்புடைய எளிய மொழிநடை.
5) பரந்த தேசத்தில் வியாபித்து இருக்கக் கூடியது.




agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

12. தேசிய ஊடக விளங்கறிவுக்கான அமெரிக்க தேசிய நிறுவன வரைவிலக்கணத்தின் படி ஊடக விளங்கறிவு என்பதற்கான பண்புடன் பொருந்தாதது.
    1) ஊடகங்களில் நுழைதல்.
    2) ஊடகங்களை ஆய்வு செய்தல்.
    3) ஊடகங்களை மதிப்பீடு செய்தல்.
    4) ஊடகத்தில் செயற்திறனற்ற வகையில் செயற்படல்.
    5) ஊடக உள்ளடக்க உருவாக்கம்.

13. புதிய ஊடகத்தின் பண்பியல்புகளுடன் பொருந்தாத கூற்று.
    1) எண்ணிமைப்படுத்தல் 2) அதிவேகத்தன்மை 3) தானியங்கி
    4) வலையமைப்பு 5) மேற்பார்வை

❖ **14 – 17 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்துக.**

- **கீவருவது ஹரோல்ட் டி லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரியெனக் கருதுக.**




**14.** லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரியில் இடம்பெறுவனவற்றிலிருந்து ஒரு விடயம் நீக்கப்படுமாக இருந்தால் அது பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளவற்றை ஒத்ததாக அமையும். அவ்வாறு ஒத்திருப்பதற்கு மேற்குறித்த மாதிரியில் உள்ள விடயங்களில் நீக்கப்பட வேண்டியது
    1) A 2) B 3) C 4) D 5) E

15. பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளடக்கியுள்ள ஒவ்வொரு மூலாதாரத்துடனும் இணைந்ததாக ஐந்து பிரதான பண்புகள் வீதம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. மேலே வினா 14 இன் விடயாகக் குறிப்பிடப்பட்ட விடயம் நீக்கப்பட்டதன் பின்னர் மிகுதியாகவுள்ள நான்கு விடயங்களும் பெர்லோவின் மாதிரியுடன் ஒத்திருக்குமாயின், அந்த நான்கில் ஒரே விதமான பண்புகளைக் காணக்கத்தக் விடயங்ள் இரண்டுமாவன,
    1) A, B ஆகியன 2) A, D ஆகியன 3) B, C ஆகியன
    4) B, D ஆகியன 5) C, E ஆகியன

16. மேற்படி மாதிரியில் பின்னூட்டம் உள்ளீர்க்கப்படுமாயின், செய்தியானது பயணிப்பது
    1) B யிலிருந்து A இற்காகும். 2) A யிலிருந்து D இற்காகும்.
    3) D யிலிருந்து A இற்காகும 4) E யிலிருந்து A இற்காகும்.
    5) A யிலிருந்து E இற்காகும்.

17. மேற்படி மாதிரி வெகுசனத் தொடர்பாடல் சந்தர்ப்பமொன்றில் பிரயோகிக்கப்படுமானால் செய்திப் பத்திரிகைக்கரிய விடயமாக அமைவது
    1) A 2) B 3) C 4) D 5) E



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

18. வெகுசன ஊடகங்களின் விசேடமான பணிகளுடன் பொருந்துவது.
1) தூண்டல் 2) பொருட்கோடல் 3) அறிவூட்டல்
4) உலகமயமாக்கம் 5) மகிழ்வூட்டல்

19. ஊடக விளங்கறிவு தொடர்பாக முன்வைக்கப்பட்ட கூற்றுக்கள் சில கீழ்க் காணப்படுகின்றன.
A) ஊடக விளங்கறிவின் அடிப்படை எழுதுவதற்கும் மற்றும் வாசிப்பதற்குமான ஆற்றலாகும்.
B) ஊடக விளங்கறிவு அதிகம் பொருத்தமாக இருப்பது அச்சு ஊடகங்களிலாகும்.
C) ஊடக உள்ளடக்கத்தை விளங்கிக் கொண்டு அதனை நுகர்வது ஊடக விளங்கறிவாகும்.
D) தகவல் உருவாக்குதல் மற்றும் மதிப்பிடுதல் ஊடக விளங்கறிவின் ஓர் அங்கமாகும்.

மேற்காணும் கூற்றுக்களில்,
1) A மாத்திரம் உண்மையானது.
2) B மாத்திரம் உண்மையானது.
3) C மாத்திரம் உண்மையானது.
4) A, B ஆகியன மாத்திரம் உண்மையானவை.
5) C, D ஆகியன மாத்திரம் உண்மையானவை.

20. நிச்சயிக்கப்பட்ட தகவல் மூலம் காணப்படும்.
- தகவலானது குறிக்கோள், நோக்கத்தை அடிப்படையாக கொண்டமைந்தது.
- தகவலின் நம்பகத்தன்மை உயர்வானது.

மேற்குறித்த பண்பியல்புகளுடன் மிகப்பொருந்தும் தொடர்பாடல் வடிவம்.
1) மெய்நிகர் தொடர்பாடல் 2) முறைசார் தொடர்பாடல் 3) முறைசாராத் தொடர்பாடல்
4) எழுத்துத் தொடர்பாடல் 5) அளிக்கைத் தொடர்பாடல்

21. A) மனிதனின் செயற்கையான நடவடிக்கையின் விளைவு
B) மனித அனுபவங்கள் மற்றும் ஆற்றல்களின் இணைவு
C) சமூகத்தை ஒன்றாக இணைக்காத பெறுதிகளைக் கொண்டது.
D) மானிட எண்ணக்கருக்கள், நம்பிக்கைகள் மற்றும் சம்பிரதாயங்கள் போன்றவற்றின் சேர்க்கை.

மேற்குறித்த கூற்றுக்களில் பண்பாட்டுடன் பொருந்தக் கூடியவை.
1) A, B, C 2) A, C, D 3) B, C, D 4) A, B, D 5) A, B, C, D

22. தொடர்பாடல் கற்கைநெறி தனிப்பெரும் துறையாக தற்போது வளர்ச்சியடைய ஆரம்பகாலத்தில் அத்திபாரமிட்டவர்கள் முறையே.
1) அரிஸ்ரோட்டில், லாஸ்வெல், ஷ்ராம் 2) லாஸ்வெல், கூலி, ஷனன்
3) லிப்மன், ஷனன், வீவர் 4) ஜோன்டூவி, கூலி, பெர்லோ
5) லிப்மன், கூலி, ஜோன்டூவி

23. பின்வருவனவற்றுள் ஊடக விளங்கறிவை கட்டியெழுப்புவதில் செல்வாக்கு செலுத்தும் மூன்று சித்தார்ந்தங்கள்.
1) தனிப்பட்ட அவதானம், மதிப்பீடு, இறையாண்மை.
2) திறன்கள், பகுப்பாய், தொகுத்தறிதல்.
3) தனிப்பட்ட அவதானம், திறன்கள், அறிவுக்கட்டமைப்பு.
4) பகுப்பாய்வு, மதிப்பீடு, சாராம்சம்.
5) தொகுப்பாக்குதல், உய்த்தறிதல், குழுவாக்கல்.


agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

24. தொலைக்காட்சி ஊடகத்தில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளினை சிறுவர்கள் பார்ப்பதனால் அவர்கள் மத்தியில் ஏற்படும் தாக்கங்கள் பற்றி வகுப்பறையில் மாணவர்கள் பின்வருமாறு கூறியிருந்தனர். இவற்றில் பேராசிரியர் வில்பர் ஷ்ராமின் ஆய்வு முடிவுகளுடன் பொருந்தும் கூற்றுக்களை தெரிவு செய்க.

அஜய் - வன்முறை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனால் சிலருக்கு கோப உணர்வு மேலோங்கும்.

தரன் - சிறுவர்களின் சமூகத் தொடர்பு நலிவடையும்.

நிகேஷ் - பெற்றோர்களுடன் முரண்படும் நிலை ஏற்படும்.

ஜிலக்ஷன் - போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படும்.

1) அஜய், ஜிலக்ஷன்
2) தரன், நிகேஷ்
3) நிகேஷ்,அஜய்
4) ஜிலக்ஷன், நிகேஷ்
5) அஜய், தரன்

25. தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தை மாணவர்கள் கற்பதனால் அவர்களுக்கு கிடைக்கும் நன்மைகளுடன் பொருந்தாத கூற்று.

1) ஊடக விளங்கறிவு ஏற்படல்
2) ஆன்மீக சிந்தனை ஏற்படல்
3) தலைமைத்துவப் பண்பு ஏற்படல்
4) மதிநுட்பத்திறன் ஏற்படல்
5) படைப்பாக்கத்திறன் ஏற்படல்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி - II

- **எவையேனும் ஐந்து வினாக்களிற்கு மாத்திரம் விடை தருக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் இருபது (20) புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

01. "தொடர்பாடல் செயன்முறை என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றாகும்"
    1) தொடர்பாடல் பற்றிய சார்ள்ஸ் ஹோர்ட்டன் கூலியின் வரைவிலக்கணத்தை தருக. (2 புள்ளிகள்)
    2) நிறுவன மட்டத்தில் உயர்வாக இடம்பெறக்கூடிய முறைசார் மற்றும் முறைசாராத் தொடர்பாடல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை தலா இரண்டு பண்புகளின் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)
    3) ஷெனென் மற்றும் வீவரின் தொடர்பாடலுக்கான எளிய மாதிரியினை வரைந்து அதிலுள்ள அடிப்படைக்கூறுகளில் ஒன்றிற்கு சிறுவிளக்கம் தருக. (6 புள்ளிகள்)
    4) தொடர்பாடலின் நோக்கங்கள் நான்கினை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.(8 புள்ளிகள்)

02. "பண்பாடானது சிக்கலான ஒரு செயற்பாடாகும்"
    1) பண்பாட்டிற்கான ஈ.பி. ரெய்லரின் கருத்து விளக்கத்தின் படி பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
    2) பிரசித்த பண்பாட்டின் பண்பியல்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றிற்கு உதாரணங்களுடன் விளக்கம் தருக. (4 புள்ளிகள்)
    3) வெகுசன ஊடகங்களில் வெளிவரும் விளம்பரப்படுத்தல் மூலம் பண்பாட்டில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களை நான்கு விடயங்கள் ஊடாக சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)
    4) உலகை அச்சுறுத்திய Covid 19 (கொரோனா) நோய் தாக்கத்தினால் பாடசாலைமட்ட கற்றல் செயற்பாடு தடைப்பட்டிருந்தது. இந்நிலையில் வீட்டிலிருந்து கற்றலை மேற்கொள்வதற்காக சமூக ஊடகங்களில் உள்ளீடுகள் / பிரயோகங்கள் (APPS) முறையிலான கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்கள் எதிர்நோக்கிய நன்மை தீமைகளினை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

03. 1) தொடர்பாடல் துறை தனிப்பெரும் கற்கைநெறியாக வளர்ச்சியடைய பங்காற்றிய மேற்கத்தேச அறிஞர்கள் நால்வரின் பெயரினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
    2) செய்திப் பத்திரிகையில் வன்முறை சார் தகவல்கள் எவ்வாறு விபரிக்கப்படுகின்றது என்பதை இரண்டு முறைகளில் விளக்குக. (4 புள்ளிகள்)
    3) ஊடகப் பண்பாட்டின் இயல்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டிற்கு சுருக்கமான விளக்கம் தருக. (6 புள்ளிகள்)
    4) இலங்கையில் தொடர்பாடல் கற்கைத் துறையின் வளர்ச்சியினை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

04. 1) வானொலி ஊடகத்தின் அடிப்படை இயல்புகள் நான்கினைத் தருக. (2 புள்ளிகள்)
    2) தொடர்பாடலில் இடம்பெறக்கூடிய இடையூறுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்று தொலைபேசித் தொடர்பாடலில் எவ்வாறுள்ளது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
    3) பாரம்பரிய ஊடகங்களின் முக்கியத்துவம் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)
    4) சமூக ஊடகப் பாவனையினால் நபரொருவர் எதிர்கொள்ளும் தாக்கங்களினை எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

05. “அன்றாட வாழ்க்கை மற்றும் ஊடகத்திற்கிடையிலான தொடர்பை அர்த்தமுள்ளதாக மாற்ற ஊடக விளங்கறிவு மற்றும் ஊடகத்திறனாய்வு என்பன முக்கியமானவையாகும்”

1) உயர் ஊடக விளங்கறிவை விருத்தி செய்வதால் எட்டப்படும் நன்மையொன்றினை எழுதுக. (2 புள்ளிகள்)

2) ஊடக விளங்கறிவை கட்டியெழுப்புதல் தொடர்பான மூன்று கோட்பாடுகளை சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (4 புள்ளிகள்)

3) ஊடகங்கள் சிறுவர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் மீது தாக்கம் செலுத்தும் விதம் தொடர்பில் உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

4) விமர்சன ரீதியிலான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் அல்லது திறன்கள் ஆறினைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டிற்கு விளக்கம் தருக. (8 புள்ளிகள்)

06. 1) வெகுசன ஊடகங்களில் வாயிற்காப்பாளர்களின் வகிபங்கினால் செய்திகளில் ஏற்படும் மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) குழுத் தொடர்பாடலில் குழுவை வழிநடத்திச் செல்லும் தலைவர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் நான்கை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றுக்கு விளக்கம் எழுதுக. (4 புள்ளிகள்)

3) வெகுசன ஊடகங்களின் விசேடமான பணிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டிற்கு சுருக்கமான விளக்கம் தருக. (6 புள்ளிகள்)

4) வெகுசனத் தொடர்பாடலுக்கும் மெய்நிகர் தொடர்பாடலுக்குமிடையிலான வேறுபாடுகளை நான்கு பண்புகளின் அடிப்படையில் விளக்குக. (8 புள்ளிகள்)

07. 1) அரிஸ்ரோட்டில் மாதிரியின் விசேட இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) அ) பத்திரிகைக்கான வரைவிலக்கணம் ஒன்றினை எழுதுக. (2 புள்ளிகள்)

ஆ) தொலைக்காட்சி ஊடகத்தின் அடிப்படை இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) பேச்சுத் தொடர்பாடல் ஆற்றல் விருத்திக்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டிற்கு விளக்கம் எழுதுக. (6 புள்ளிகள்)

4) அ) தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகளான குறிமுறையாக்கம், குறி முறையவிழ்ப்பு என்பவற்றை சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (2 புள்ளிகள்)

ஆ) தொடர்பாடலின் பண்புகள் நான்கினை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk